# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.243/மா/2024
நாள் 19.08.2025

திரு. R. காதர், ...... முறையீட்டு மனுதாரர்
வேலூர்.

ஆணையர், ....... எதிர் மனுதாரர்
வேலூர் மாநகராட்சி.

வேலூர்–1, இக்ரா பள்ளி அருகில், சின்ன அல்லாபுரம் மெயின் ரோடு, கதவு எண் 18/A1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. காதர் என்பவரின் 30.11.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.12.2024 அன்று பெறப்பட்டு 243/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

வேலூர்–1, இக்ரா பள்ளி அருகில், சின்ன அல்லாபுரம் மெயின் ரோடு, கதவு எண் 18/A1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. காதர் என்பவர் 30.11.2024 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

> "வேலூர் மாநகராட்சி மண்டலம்–4ல் உள்ள பகுதியில் சாலையில் புதிய கால்வாய், சாலை அமைக்கப்பட்டது. புதிய கால்வாய், சாலை அமைக்கப்படும்போது இயங்கி கொண்டிருந்த, பொதுமக்கள் பயன்படுத்திய 10க்கு மேற்பட்ட ஆழ்துளை கிணறு, டேங் சேதப்படுத்தப்பட்டது. கால்வாய், சாலை அமைத்த பிறகு ஆழ்துளை கிணறு மற்றும் டேங் சரி செய்யவில்லை. இதனால் பொது மக்கள் தண்ணீருக்காக கஷ்டப்படும் நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளது. புதிய ஆழ்துளை கிணறு, டேங் அமைக்க இரண்டு இலட்சம் செலவு ஆகிறது. 10 X 2,00,000 வேலூர் மாநகராட்சிக்கு இருபது லட்சம் வீணாகியது. மீண்டும் அனைத்து ஆழ்துளை கிணறு சரிசெய்து, கடமை செய்ய தவறிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறோம்." என தெரிவித்துள்ளார்.

சேதம் அடைந்துள்ள இடங்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :-

| | | | |
|---|---|---|---|
| (1) | வார்டு எண் 40 மற்றும் 41 – கஸ்பா பகுதி | - | 3 ஆழ்துளை கிணறு |
| (2) | வார்டு எண் 42 R.N. பாளையம் ஜண்டா தெரு | – | 4 ஆழ்துளை கிணறு |
| (3) | வார்டு எண் 48 சின்ன அல்லாபுரம் பகுதி | – | 4 ஆழ்துளை கிணறு |

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 18.12.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் வேலூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. வேலூர் மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி ஆணையாளர் (பொ) தனது கடிதம் ந.க. எண் 3412/2024/இ1/மஅ4 நாள் 04.07.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதில்–

“வேலூர் மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண் 40, 41, 42 மற்றும் 48 பகுதிகளில் பழுதடைந்த ஆழ்துளை கிணறுகளை பழுது நீக்கும் பணி துவக்கப்படும் நிலையில் உள்ளது என தெரிவிக்கப்படுகிறது.” என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 09.07.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 09.07.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“வேலூர் மாநகராட்சி மண்டலம்–4ல் உள்ள பகுதியில் புதியதாக கால்வாய், சாலை அமைக்கப்பட்டது. புதிய கால்வாய் சாலை அமைக்கும் போது இயங்கிக் கொண்டிருந்த 10க்கும் மேற்பட்ட ஆழ்துளை கிணறு, டேங் சேதப்படுத்தப்பட்டது. கால்வாய் சாலை அமைத்த பிறகு ஆழ்துளை கிணறு மற்றும் டேங் சரி செய்யவில்லை இதனால் பொது மக்கள் தண்ணீருக்காக கஷ்டப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இதுகுறித்து வேலூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் தெரிவித்தும் இதுநாள் வரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே, மேற்கண்ட புகார் குறித்து ஒரு குழு அமைத்து அக்குழுவில் என்னையும் ஒரு உறுப்பினராக சேர்த்து கள ஆய்வு செய்யவும், பணிகள் சரியாக செய்யாத ஒப்பந்தாரர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், ஒப்பந்ததாரர் மீண்டும் ஒப்பந்தம் எடுக்காதவகையில் நடவடிக்கை எடுக்கவும், மேலும் அனைத்து ஆழ்துளை கிணறுகளை சரிசெய்து, கடமை செய்ய தவறிய அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும், மேற்கண்ட பணிகளை நிறைவேற்றிட கால கெடு நிர்ணயிக்க வேண்டுகிறேன் என மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

6. வேலூர் மாநகராட்சி மண்டலம் 4ன் இளநிலை பொறியாளர் (பொ) 09.07.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

(1) வேலூர் மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண் 40, 41, 42 மற்றும் 48 பகுதிகளில் பழுதடைந்த 6 ஆழ்துளை கிணறுகள் பழுது நீக்கி நல்ல நிலையில் செயல்படுகிறது.

(2) மற்ற 4 பழுதடைந்த ஆழ்துளை கிணறுகளை சீரமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, முறையான ஒப்புதல் பெறப்பட்ட பின் பணி மேற்கொள்ளப்படும்.

(3) ஒப்பந்ததாரரால் பழுதடைந்த ஒரு ஆழ்துளை கிணற்றிற்கு உரிய ஒப்பந்த தொகையில் ஒரு குறிப்பிட்ட தொகை கழிக்கப்பட்டுள்ளது.

(4) மண்டலம் 4–ல் பழுது பார்க்கப்பட்ட 6 (ஆறு) ஆழ்துளை கிணறுகளின் விவரங்களை ஒரு வாரத்திற்குள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்கிறேன் என மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

7. தற்போது, வேலூர் மாநகராட்சி, மண்டலம் 4, உதவி ஆணையாளர் தன்னுடைய 31.07.2025 நாளிட்ட கடிதத்தில் கூடுதல் விவரங்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

(i) வேலூர் மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண் 40 மற்றும் 41 பகுதிகளில் கீழ்க்கண்ட 5 ஆழ்துளை கிணறுகள் பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (1) | சின்ன தெரு | – | 1 |
| (2) | பயர்லைன் 2வது தெரு | – | 1 |
| (3) | பயர்லைன் 3வது தெரு | – | 1 |

(4) பிள்ளையார் கோயில் தெரு – 1
(5) ஐயப்பன் கோயில் தெரு – 1

(ii) வேலூர் மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண் 42 பகுதியில் கீழ்க்கண்ட 4 ஆழ்துளை கிணறுகள் பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

(1) பச்சையப்பன் கவுண்டர் தெரு – 2
(2) புதுத் தெரு – 1
(3) ஜண்டா தெரு – 1

(iii) வேலூர் மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண் 48 பகுதியில் கீழ்க்கண்ட 6 ஆழ்துளை கிணறுகள் பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

(1) பனந்தோப்பு 5வது தெரு – 1
(2) காதர் பேட்டை 2வது தெரு – 1
(3) முல்லை நகர் 1வது தெரு – 1
(4) பனந்தோப்பு 3வது தெரு – 2
(5) மந்தைவெளி – 1

வார்டு எண் 42, ஜண்டா தெரு மற்றும் புது தெருவிலுள்ள ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார் சிக்குபட்டுள்ளதால் மேற்கண்ட ஆழ்துளை கிணறுகள் முற்றிலும் கைவிடப்பட்டது என்பதை பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரரின் மனு, வாக்குமூலம், வேலூர் மாநகராட்சி மண்டலம் 4ன் உதவி ஆணையாளரின் அறிக்கைகள் மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர், தனது மனு மற்றும் வாக்குமூலத்தில், வேலூர் மாநகராட்சி மண்டலம்–4ல் உள்ள பகுதியில் புதியதாக கால்வாய், சாலை அமைக்கும் போது இயங்கிக் கொண்டிருந்த 10க்கும் மேற்பட்ட ஆழ்துளை கிணறுகள், டேங்குகள் சேதப்படுத்தப்பட்டது எனவும், கால்வாய், சாலை அமைத்த பிறகு ஆழ்துளை கிணறு மற்றும் டேங் சரி செய்யவில்லை எனவும், இதனால் பொது மக்கள் தண்ணீருக்காக கஷ்டப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள் எனவும், இதுகுறித்து வேலூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் தெரிவித்தும் இதுநாள் வரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், பணிகள் சரியாக செய்யாத ஒப்பந்தாரர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், ஒப்பந்ததாரர் மீண்டும் ஒப்பந்தம் எடுக்காதவகையில் நடவடிக்கை எடுக்கவும், மேலும் அனைத்து ஆழ்துளை கிணறுகளை சரிசெய்து, கடமை செய்ய தவறிய அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும், மேற்கண்ட பணிகளை நிறைவேற்றிட கால கெடு நிர்ணயிக்க கோரியிருப்பதும் அறிய முடிகிறது.

வேலூர் மாநகராட்சி, மண்டலம்–4ன் இளநிலை பொறியாளர் வாக்குமூலத்தில், வார்டு எண் 40, 41, 42 மற்றும் 48 பகுதிகளில் உள்ள 10 ஆழ்துளை கிணறுகளில், பழுதடைந்த 6 ஆழ்துளை கிணறுகள் பழுது நீக்கி நல்ல நிலையில் செயல்படுகிறது என்பதும், வேலூர் மாநகராட்சி, மண்டலம்–4ன் உதவி ஆணையாளரின் அறிக்கையில், வார்டு எண் 40 மற்றும் 41 பகுதிகளில் 5 ஆழ்துளை கிணறுகள், வார்டு எண் 42 பகுதியில் 4 ஆழ்துளை கிணறுகள் மற்றும் வார்டு எண் 48 பகுதியில் 6 ஆழ்துளை கிணறுகள் பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளன என்பதும் ஒப்பந்ததாரரால் பழுதடைந்த ஒரு ஆழ்துளை கிணற்றிற்கு உரிய ஒப்பந்த தொகையில் ஒரு குறிப்பிட்ட தொகை கழிக்கப்பட்டுள்ளது என்பதும், அறிய முடிகிறது.

இந்நேர்வில், வேலூர் மாநகராட்சியில், தற்போது, மண்டலம்–4, வார்டு எண் 40 மற்றும் 41 பகுதிகளில் 5 ஆழ்துளை கிணறுகள், வார்டு எண் 42 பகுதியில் 4 ஆழ்துளை கிணறுகள் மற்றும் வார்டு எண் 48 பகுதியில் 6 ஆழ்துளை கிணறுகள் பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளன என்பதும், வேலூர் மாநகராட்சி உதவி ஆணையர் அறிக்கையின் மூலம் அறிய முடிகிறது. இருப்பினும்,

மேற்சொன்ன பணிகளை கள ஆய்வு செய்வதற்கு அண்ணா பல்கலைக் கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளில் பணியாற்றும் பொறியியல் பேராசிரியர் உள்ளடக்கிய ஒரு குழு அமைத்து, அக்குழுவின் அறிக்கை பெற்று, அதனடிப்படையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேலூர் மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி ஆணையருக்கு உத்தரவிடுமாறு வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு R. காதர்,
கதவு எண் 18/A1 சின்ன அல்லாபுரம் மெயின் ரோடு,
இக்ரா பள்ளி அருகில்,
வேலூர்–1,

(2) ஆணையர்,
வேலூர் மாநகராட்சி,
வேலூர்.

(3) உதவி ஆணையாளர்,
வேலூர் மாநகராட்சி,
மண்டலம் 4,
வேலூர்.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.